## கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
## ஸ்ரீவில்லிபுத்தூர்

O.S.No.12/2017 நாள்– 01.06.2026

திரு.கொ.முனியாண்டி, உதவி ஆய்வாளர், ஆலங்குளம் காவல் நிலையம் ஆஜராகி அவரை சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரை பி.வா.சா. 3 ஆக முதல் விசாரணை வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் திரு.P.ஹரிகிருஷ்ணன், என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கொ.முனியாண்டி | தாலுகா | |
| த–பெ | கொன்னமுத்து | தொழில் | உதவி ஆய்வாளர் ,<br>ஆலங்குளம் காவல் நிலையம் |
| கிராமம் | | வயது | 53 |

**முதல் விசாரணை**

அவர் மூலம் இன்று குறியீடு செய்யப்படும் ஆவணம் **X1 வரிசைகள்** (மொத்தம் 9 பக்கங்கள்)

**குறுக்கு விசாரணை 1 மற்றும் 2 எதிர்வாதிகள் தரப்பில்**

புகார்தாரர் எங்களது காவல் நிலையத்தில் கொடுத்திருந்த புகாரானதும் எங்களது குற்றவியல் ஆவணம் , குற்றம் மாவட்ட ஆவண காப்பகத்தில் இருக்கும் என்றால் சரிதான். அதற்கான ரசீதும் காவல் நிலையத்தில் இருந்து கொடுக்கப்படவையும் எங்களது குற்றவியல் ஆவணம் , குற்றம் மாவட்ட ஆவண காப்பகத்தில் இருக்கும் என்றால் சரிதான். கடந்த 31.08.2010ம் தேதியில் எங்களது காவல் நிலையத்தில் இருந்து புகார் மனு ஏற்பு சான்றிதழை புகார்தாரர் V.பரமானந்தம் அவருக்கு வழங்கியதை எங்களது குற்றவியல் ஆவணம் , குற்றம் மாவட்ட ஆவண காப்பகத்தில் இருக்கும் என்றால் 2010ம் ஆண்டுக்குரியது என்பதால் 10 ஆண்டுக்கு மேற்பட்ட ஆவணம் என்பதால் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டுவிட்டது. நான் தாக்கல் செய்துள்ள X1 ஆவணத்தில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து இன்ன இன்ன ஆவணங்களை அழிக்கப்படவேண்டியது என்று சொல்லி குறிப்பிட்ட உத்தரவு வந்துள்ளதா என்று கேட்டால் வந்துள்ளது அது 23.03.2016ம் தேதியிட்ட C.No.F4/14308/16 ஆகும். அதையும் இணைத்துள்ளேன். மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிமிடருந்து வட்டார காவல் துறை துணை கண்காணிப்பாளருக்கு உத்தரவு வரப்பெற்று அவர் மூலமாக எங்கள் காவல் நிலையத்திற்கு தெரியப்படுத்தி அதன் பேரில் 10ஆண்டுக்கு மேல் உளள் ஆவணம் என்பதால் அழிக்கப்பட்டுவிட்டது. அரசாங்க மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் உத்தரவு அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் அந்த அந்த காவல் நிலையத்தில் இருந்து அழிக்கப்பட்டு விடும். எங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து வரபெற்ற சாட்சிய சம்மனில் சொல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் எங்களது காவல் நிலையத்தில் உள்ளது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேற்படி ஆவணங்கள் அழிக்கப்பட்டு விட்டதாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாகனங்கள் குற்றம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தான் எங்களால் அழிக்க முடியும் என்றும் சாட்சிய சம்மனில் சொல்லப்பட்ட ஆவணங்கள் எங்களால் அழிக்க முடியாது

என்று சொன்னால் அப்படியில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 10 வருடங்களுக்கு முன்பு வழக்கு சம்மந்தப்பட்டிந்தால் அவர் மீது இன்ன இன்ன வழக்குகள் பதியப்பட்டிருக்கிறது என்ற விபரங்கள் ஆவணங்களில் துலங்குமா என்று கேட்டால் அந்த அந்த வழக்கின் தன்மையை பொறுத்து ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டு அவைகளில் துலங்கும். நான் தாக்கல் செய்துள்ள X1ல் சொல்லப்பட்ட ஆவணம் அப்பொழுது கணினிமயமாக்கப்படவில்லை. சாட்சிய சம்மனில் சொல்லிய ஆவணங்கள் வழக்கிற்கு எதிர்வாதிகளுக்கு சாதகமாக உள்ளது என்பதால் அதனை மறைத்து வாதிகளுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அப்படியில்லை.

**குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்**

நான் கடந்த 4 மாத காலமாக ஆலங்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தது இல்லை. வழக்கு சம்மந்தப்பட்டது கோவில் என்று எனக்கு தெரியும். அது எந்த கோவில் என்ற விபரம் என்பதும் எனக்கு தெரியும். இந்த கோவிலானது ஆலங்குளம் வட்ட காவல் நிலைய எல்லைக்குள் உள்ளது. கடந்த 4 மாதங்களுக்கு முன்பு எனக்கு இந்த கோவில் பற்றி விபரம் எனக்கு தெரியாது. கடந்த 4 மாத காலமாக இந்த கோவில் சம்மந்தமாக குற்ற நிகழ்வுகள் எங்கள் காவல் நிலையத்தில் பதிவாகவில்லை. இதற்கு முன்பு குற்ற நடவடிக்கை எதுவும் எங்கள் காவல் நிலையத்தில் பதிவாகியிருந்ததா என்பது பற்றி எனக்கு தெரியாது. இந்த தாவா கோவிலை பொறுத்தமட்டில் ஒரு தனி நபரான பிரதிவாதி பரமானந்தம் என்பவர் தான் மற்ற யாரையும் கோவிலுக்குள் விடமாட்டேன் என்றும், வாதி சமூகத்தினர் தங்களுக்கு இந்த கோவிலில் திருவிழா நடத்துவதற்கு அனைத்து உரிமைகளும் உள்ளது என்று சொல்லி தாவா செய்து வருவது பற்றி எனக்கு தெரியும். இது தவிர்த்து அந்த கோவிலில் வேறு பிரச்சனை எதுவும் இல்லை. உரிமையியல் வழக்கு சம்மந்தப்பட்ட பிரச்சனை என்பதால் காவல் நிலையத்தில் இருந்து நாங்கள் விசாரிக்கவில்லை.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 01st day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.